## மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
## பதவி வெற்றிடங்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் பொருத்தமான தகைமை பெற்று பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட நிரந்தரமான பதவியில் உள்ள ஊழியர்களிடம் மட்டும் இருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பங்கள் பொருத்தமான ஆவணங்களுடன் (விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டவாறு) உரிய நிறுவனத்தின் செயலாளர்/பதிவாளர்/முதல்வர்/பணிப்பாளர் ஊடாக மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உதவிப்பதிவாளர்/தாபனக்ககிளை (கல்விசாரா ஆளணி)க்கு 07.11.2025திகதிக்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பூரணமற்ற விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

### விடுதிக்காப்பாளர் (முழு நேரம்) தரம் II பதவி (பெண் மாணவர் விடுதிகளுக்கானது)

தகைமைகள்:

i. ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரி, விடுதிகளின் முகாமைத்துவத்திலும் நிர்வாகத்திலும் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பள அளவு: U-MN3(11) Rs.71,365-18x1,190-92785p.m.

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: நேர்முகத் தேர்வு மூலம்.

### தொழில் நுட்ப உத்தியோகத்தர் (தரம் II) பிரிவு "B" பதவி

தகைமைகள்:

i. இரண்டு (02)தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் 5 திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்திகள். திறமைச்சித்திகள் விஞ்ஞானத்தையும் கணிதத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

அல்லது

ii. மூன்று (03) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் 06 பாடங்களில் சித்திகள் உடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலோ ஒரு உயர் கல்வி நிறுவனத்திலோ 08 வருடங்கள் திருப்திகரமான நிரந்தர சேவையினை கொண்டிருத்தல் வேண்டும். சித்தி பெற்ற பாடங்கள் விஞ்ஞானத்தினையும் கணிதத்தினையும் உள்ளடக்குதல் வேண்டும்.

அல்லது

iii. ஒரு உயர்கல்வி நிறுவனத்திலே ஒரு ஆய்வு கூட உதவியாளராக 15 வருடங்கள் திருப்திகரமான நிரந்தர சேவையினை கொண்டிருத்தல் வேண்டும்.

சம்பள அளவு: U-MT I (III) Rs. 51,095 – 7x540; 10x640 – 60,575 p.m.

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தாபன சுற்றறிக்கை கடிதம் இல.06/2020 இன் நிபந்தனைகளின்படி, பல்கலைக்கழக முறைமையினுள் ஒரு பதவியில் இருந்து இன்னொரு பதவிக்கான நியமனமாகும், சந்தர்ப்பத்தில், அரச தாபன கோவையின் VII அத்தியாயம் பிரிவு 09 இற்கமைய சம்பளப்படி நிலையில் அமர்த்தப்படுவார்.

தெரிவு முறை: ஒரு உளச்சார்பு பரீட்சை மூலமும் ஒரு நேர்முகத் தேர்வு மூலமும்.

தொழில்நுட்பவியலாளர் சேவையில் **"பிரிவு B"** இன் கீழான நியமனம் 3 வருடங்களுக்கு **"பயிலுநர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்"** ஆக இருக்கும். பயிற்சிக்காலத்தின் முடிவில்,அய்வுகூட நுட்பங்கள், பொருள் கோரல், பொருட்பதிவேடுகளை பராமரித்தல், ஆங்கிலத்தில் தட்டச்சு செய்தல் போன்ற திறன்களைப் பெற்றுக்கொண்டவர்கள் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள். "தொழில் நுட்ப உத்தியோகத்தர் தரம் II – பிரிவு B" நிரந்தர பதவிக்கு நியமனம் செய்யப்படும்.

**<u>தொழில் நுட்ப உத்தியோகத்தர் (தரம் II) பிரிவு "A" பதவி</u>**

தகைமைகள்:

i. தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா அல்லது சமமான தகைமை.

அல்லது

ii. பொறியியலில் உயர்தேசிய டிப்ளோமா.

அல்லது

iii. பொருத்தமான துறையில் உயர் தேசிய டிப்ளோமா

அல்லது

iv. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பொருத்தமான துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட குறைந்தது இரண்டு வருடங்கள் முழுநேர டிப்ளோமா உடன் பொருத்தமான துறையில் ஒரு (01) வருட அனுபவம்.

சம்பள அளவு: U-MT I (II) Rs. 57,435 – 7x640; 9x890 – 69,925p.m.

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு மூலம்.

மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பம்/தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (வலைத்தள விருத்தி, பராமரிப்பு, தரவுத்தள முகாமைத்துவம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம்) / உயிரியல் விஞ்ஞானம், உயிரியல் மருத்துவ விஞ்ஞானம், உயிரியல் தொழிநுட்பம், இரசாயனவியல் / மல்டிமீடியா மற்றும் கட்புல செவிப்புல தொழிநுட்பங்கள், இலத்திரனியவியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் / இரசாயன மற்றும் செயல்முறை தொழில்நுட்பம் என்பவற்றில் சிறந்த அறிவும் அனுபவமும் கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## தொழில் நுட்ப உத்தியோகத்தர் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்) தரம் III பதவி

தகைமைகள்:

i. ஒரே தடவையில் கா.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஏதாவது துறையில் மூன்று (03) பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

ii. தகவல் தொடர்பாடல் மற்றும் மல்டிமீடியா தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ தகவல் தொழில்நுட்பம் அல்லது அதற்கு சமமான துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட N.V.Q. நிலை 5 க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பள அளவு: U-MT I (III) Rs. 51,095– 7x540; 10x640 – 60,575p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: எழுத்து மூல பரீட்சை மற்றும்/அல்லது ஒரு செய்முறை பரீட்சை மூலமும் ஒரு நேர்முகத் தேர்வு மூலமும்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## மருந்தாளர் (குறைந்த தரம்) பதவி

தகைமைகள்:

i. இலங்கை மருத்துவ சபையால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிவாய்ந்த மருந்தாளுநருக்கானத் தேர்ச்சிச் சான்றிதழ்.

சம்பள அளவு: U-MT 1 (III) Rs. 51,095-7x540; 10x640 - 60,575 p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: நேர்முகத் தேர்வு மூலம்.

## பொதுச் சுகாதார பரிசோதகர் தரம் III பதவி

தகைமைகள்:

i. சுகாதாரத் திணைக்களத்தால் நடத்தப்படும் பொது சுகாதார பரிசோதகர்கள் தேர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் பல்கலைக்கழக முறைமையின் பணியாளராக இருத்தல் வேண்டும்.

சம்பள அளவு: U-MT 1 (III) Rs. 51,095-7x540; 10x640 - 60,575 p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: நேர்முகத் தேர்வு மூலம்.

**மேற்பார்வையாளர் (நிலத்தோற்றம்) தரம் III பதவி**

தகைமைகள்: a) i. இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு அமர்வுகளில் 6 பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தி.

மற்றும்

ii. விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அல்லது அதற்கு இணையான ஒரு வருட விவசாயத்தில் செய்முறைப் பயிற்சி கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

b) மூன்று (03) தடவைகளுக்கு மேற்படாதவாறு அமர்வுகளில் கா.பொ.த (சாதாரண தரம்) சித்தி பெற்றிருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலோ ஒரு உயர் கல்வி நிறுவனத்திலோ, மற்றும்/அல்லது தாவரவியல் பூங்காவிலோ நிலத்தோற்றப் பணியில் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பள அளவு: U-MT 1 (III) Rs. 51,095-7x540; 10x640 - 60,575 p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: செய்முறைப்பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு மூலம்.

**கைவினை செயல் விளக்குநர் (தரம் II) பதவி**

தகைமைகள்: i. பின்வரும் துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்:-
வார்ப்பிரும்புப் பயிற்சி, வெல்டிங் மற்றும் கம்மாலை, இயந்திரக் கருவிகள், வடிவ தயாரிப்பு, தாள் உலோக வேலை, தச்சு வேலை மற்றும் உலோக வேலை.

குறிப்பு: ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மற்றும்

ii. பல்கலைக்கழகம்/அரச சேவையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் திறமையான கைவினைஞராக குறைந்தபட்சம் பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

அல்லது

iii. பல்கலைக்கழகம்/அரச சேவையில் அல்லது மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் திறமையான சிறப்பு தரப் பதவியில் குறைந்தது மூன்று (3) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பள அளவு: U-MN 1 (III) Rs. 49,475-17x540-58,655p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: செய்முறைப்பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு மூலம்.

**முகாமைத்துவ உதவியாளர் தரம் (III) (களஞ்சியக் காப்பாளர்) பதவி**

தகைமைகள்:

1. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்:-
   i. சிங்களமொழி / தமிழ்மொழி
   ii. ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   iii. கணிதம்

மற்றும்

2. கா.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் (பொது வினாத்தாள்கள் தவிர) ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**பின்வரும் தகைமைகளை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்:**

a) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து கணனி பிரயோகத்தில் பெறப்பட்ட ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமை.

மற்றும்

b) கணினி பிரயோக தொகுப்புகளைப் பயன்படுத்துவதில் இரண்டு வருட கால அனுபவம்.

**விசேட தகைமைகள்**

மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக, பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

களஞ்சிய பராமரிப்பில் ஒரு வருட அனுபவம் மற்றும்/அல்லது க.பொ.த(சாதாரண தரம்) பரீட்சையில் வணிகப் பாடத்தில் சித்தி அல்லது க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் பாடத்தில் சித்தி.

குறிப்பு: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர் கல்வி நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்டபடி பாதுகாப்பு வைப்புத்தொகை வழங்கப்பட வேண்டும்.

சம்பள அளவு: U-MN 1 (III) Rs.49,475-17x540-58,655 p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: பின்வரும் பாடங்களில் எழுத்துப் பரீட்சை (75% மதிப்பெண்கள்)

- சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு, பொது அறிவு
- கணனி அறிவு
- தொடர்புடைய பாடப் பகுதி.

மற்றும்

நேர்முகத் தேர்வு (25% மதிப்பெண்கள்)

## முகாமைத்துவ உதவியாளர் தரம் (III) (கணக்குப் பதிவாளர்) பதவி

தகைமைகள்:

1. க.பொ.த. (சாதாரண தரம்) ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்:-
   i. சிங்களமொழி / தமிழ்மொழி
   ii. ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   iii. கணிதம்

மற்றும்

2. கா.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் (பொது வினாத்தாள்கள் தவிர) ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**பின்வரும் தகைமைகளை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்:**

a) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து கணனி பிரயோகத்தில் பெறப்பட்ட ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமை.

மற்றும்

b) கணினி பிரயோக தொகுப்புகளைப் பயன்படுத்துவதில் இரண்டு வருட கால அனுபவம்.

**விசேட தகைமைகள்.**

மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக, பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

a) திறன் மேம்பாடு மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் உள்ள இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி/ தொழில்நுட்பவியல் கல்லூரியின் கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசிய சான்றிதழ் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட பெறப்பட்ட வேறு ஏதேனும் அதற்கு இணையான தகுதிகள்.

அல்லது

b) க.பொ.த (உயர் தரம்) வணிகப் பிரிவில் தகைமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

சம்பள அளவு:

U-MN 1 (III) Rs. 49,475-17x540-58,655 p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை:

பின்வரும் பாடங்களில் எழுத்துப் பரீட்சை (75% மதிப்பெண்கள்)

- சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு, பொது அறிவு
- கணனி அறிவு
- தொடர்புடைய பாடப் பகுதி.

மற்றும்

நேர்முகத் தேர்வு (25% மதிப்பெண்கள்)

**நூலக தகவல் உதவியாளர் தரம்(III) பதவி**

தகைமைகள்:

1. இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாதவாறு அமர்வுகளில் கா.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் மூன்று (03) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்று இருத்தல்.
   i. சிங்களமொழி / தமிழ்மொழி
   ii. ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   iii. கணிதம்

மற்றும்

2. U-PL சம்பளக் குறியீட்டால் குறிப்பிடப்பட்ட சம்பள அளவைக் கொண்ட ஒரு ஆரம்பநிலைப் பதவியில் நிரந்தரப் பதவி வகிக்க வேண்டும் மற்றும் உயர் கல்வி நிறுவனத்தின் நூலகத்தில் ஐந்து (05) ஆண்டுகள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவையுடன் ஆரம்பநிலை (U-PL) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து கணனி பிரயோகத்தில் ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமையைப் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பள அளவு: U-MN 1 (III) Rs. 49,475-17x540-58,655 p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: உளச்சார்பு பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு மூலமும்.

**சாரதி தரம்(III) பதவி**

தகைமைகள்:

1. கனரக வாகனங்களை செலுத்துவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையர் நாயகத்தால் வழங்கப்பட்ட உரிமத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்ற பின்னர் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள் ஓட்டுநர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

2. முதன்மை அரைத் திறன் (U-PL 2) அல்லது முதன்மைத் திறன் இல்லாத (U-PL 1) பிரிவில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்து, தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

சம்பள அளவு: U-PL 3 (III) Rs. 48,005-16x490-55,845 p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: பிரயோக பரீட்சைமற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

**மேசன்/பிளம்பர்/வெல்டர் (தரம் III) பதவி**

தகைமைகள்:

1. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதி (NVQ) நிலை 4 க்குக் குறையாத திறன் சான்றிதழைப் பெற்ற, ஒவ்வொரு பதவியின் செயல்பாட்டிற்கும் பொருத்தமான, முதன்மை நிலை அரை-திறன் (U-

PL 2) அல்லது திறனற்ற (U-PL 1) தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட பணியாளர்கள்.

அல்லது

2. தேசிய தொழில் தகுதி (NVQ) நிலை 2 க்குக் குறையாத திறன்களுடன், பிரயோகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட, தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் பணி அனுபவத்தைப் பெற்ற, முதன்மை நிலை அரை-திறன் (U-PL 2) அல்லது திறமையற்ற (U-PL 1) தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட பணியாளர்கள்.

சம்பள அளவு: U-PL 3 (III) Rs. 48,005-16x490-55,845 p.m.
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: பிரயோக பரீட்சை மற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

<u>ஆய்வுகூட உதவியாளர் (தரம் III) பதவி</u>

தகைமைகள்:

1. தற்போதைய பதவியில் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட முதன்மை நிலை திறமையற்ற (U-PL 1) ஊழியர்கள்.

மற்றும்

i. இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாதவாறு அமர்வுகளில் கா.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு (02) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்று இருத்தல். மேலும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, ஒவ்வொரு பதவியின் செயல்பாட்டிற்கும் பொருத்தமான, தேசிய தொழிற்கல்வித் தகுதிகள் (NVQ) நிலை 2 அல்லது 3 க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

ii. இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாதவாறு அமர்வுகளில் கா.பொ.த (சாதாரண தரம்) இரண்டு (02) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்று இருத்தல். மற்றும் தொழில்துறை திறன்களுடன் தொடர்புடைய துறையில் ஒரு (01) வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு, தொழில்துறை திறன்களுடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் பணி அனுபவத்தை முடித்த முதன்மை நிலை திறமையற்ற (U-PL1) ஊழியர்கள்.

சம்பள அளவு: U-PL 2 (III) Rs. 44,575-16x490-52,415 p.m. முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: பிரயோக பரீட்சை மற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

**உழவு இயந்திர இயக்குநர் தரம் (III)பதவி**

தகைமைகள்:

1. தற்போதைய பதவியில் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட முதன்மை நிலை திறமையற்ற (U-PL 1) ஊழியர்கள்.

மற்றும்

i. இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாதவாறு அமர்வுகளில் கா.பொ.த (சாதாரண தரம்) இரண்டு (02) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்று இருத்தல். மேலும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, ஒவ்வொரு பதவியின் செயல்பாட்டிற்கும் பொருத்தமான, தேசிய தொழிற்கல்வித் தகுதிகள் (NVQ) நிலை 2 அல்லது 3 க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

ii. இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாதவாறு அமர்வுகளில் கா.பொ.த (சாதாரண தரம்) இரண்டு (02) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்று இருத்தல். மற்றும் தொழில்துறை திறன்களுடன் தொடர்புடைய துறையில் ஒரு (01) வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு, தொழில்துறை திறன்களுடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் பணி அனுபவத்தை முடித்த முதன்மை நிலை திறமையற்ற (U-PL)1 ஊழியர்கள்.

சம்பள அளவு: U-PL 2 (III) Rs. 44,575-16x490-52,415 p.m.

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: பிரயோக பரீட்சை மற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

ஒப்பமிடப்பட்டது
பதிவாளர்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,
15.10.2025